


**03. 08. 2025**

தலைப்பு செய்திகள்

- நாட்டின் ரயில்வே துறை கடந்த 11 ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- சமுதாயத்திற்கு அளப்பறிய பணியாற்றியவர் தீரன் சின்னமலை என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.
- காவிரி பாயும் மாவட்டங்களில் ஆடிப்பெருக்கு விழா இன்று கோலாகலத்துடனும் உற்சாகத்துடனும் கொண்டாடப்படுகிறது.
- மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் தமிழக அரசு சிறப்பான பேருந்து சேவைகளை வழங்குவதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.
- பிரேசிலில் உலக டேபிள் டென்னிஸ் கலப்பு இரட்டையர் இறுதியாட்டத்தில் இந்தியாவின் மனுஷ் ஷா, தியா சிட்டாலே இணை - ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

அஷ்விணி வைஷ்ணவ்

நாட்டின் ரயில்வே துறை கடந்த 11 ஆண்டுகளில் மிகப்பெரிய மாற்றங்களை கண்டுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் பாவ்நகர் ரயில் நிலையத்திலிருந்து பாவ்நகர் - அயோத்தியா கண்ட் வாராந்திர ரயில் சேவையை நேரடியாகவும்,

ஜபல்பூர் - ராய்பூர் மற்றும் ரேவா - புனே இடையேயான 2 புதிய ரயில்சேவைகளை காணொலி வாயிலாகவும் இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், நாடுமுழுவதும் ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மேலும் ரயில்வே துறையை நவீனப்படுத்துதல் பாதுகாப்பு மற்றும் தூய்மையை பராமரிப்பதில் மத்திய அரசு உறுதிப்பூண்டுள்ளதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**தீரன் சின்னமலை**

**சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின்** 220-வது நினைவுநாளை ஒட்டி சென்னை கிண்டியில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் திரு. மா.சுப்ரமணியன், திரு.மு.பெ. சாமிநாதன், திரு.சேகர்பாபு உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

சென்னையில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர்த்தூவி மரியாதை செலுத்திய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், சமுதாயத்திற்கு அளப்பறிய பணியாற்றியவர் தீரன் சின்னமலை என்று பெருமிதம் தெரிவித்தார்.

இந்நாளையொட்டி முதலமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து போராடிய ஒப்பற்ற போராளி தீரன் சின்னமலை என்று குறிப்பிட்டார்.

ஈரோடு மாவட்டம் ஓடாநிலையில் உள்ள தீரன் சின்னமலையின் நினைவு மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச்சிலைக்கு மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், அரசு விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகள் எவ்வித இடையூறுமின்றி அனுமதிக்கப்படுவதாக கூறினார்.

ஈரோடு - பழனி இடையேயான ரயில் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு.அண்ணாமலை உள்ளிட்டோர் அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖

**ஆடிப்பெருக்கு**

**தமிழ்நாட்டில் ஆடிப்பெருக்கு விழா இன்று** கோலாகலத்துடனும் வழக்கமான உற்சாகத்துடனும் கொண்டாடப்படுகிறது.

காவிரிபாயும் மாவட்டங்களில் உழவுத்தொழில் செழிக்க வேண்டி பொதுமக்கள் அதிகாலை முதலே ஆற்றின் கரையோரங்களில் கூடி காவிரித்தாய்க்கு காப்பரிசி, காதோலை கருகமணி, காய் கனிகள், மலர்கள் உள்ளிட்ட மங்கள பொருட்களை சமர்பித்து படையலிட்டு வழிபடுகின்றனர்.

தர்மபுரி ஒகேனக்கல் காவிரி ஆறு தொடங்கி திருச்சி, சேலம், ஈரோடு, தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் ஆடிப்பெருக்குவிழா பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் உள்ளிட்ட படித்துறைகளில் உரிய பாதுகாப்புடன் பொதுமக்கள் குளிக்கவும், வழிபாடு நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறை, தீயணைப்புத்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

காவிரியில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதை அடுத்து பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் வழிபாடுகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் மேட்டூர் தொடங்கி பூலாம்பட்டி, பில்லுக்குறிச்சி, கல்வரங்கம் ஆகிய இடங்களில் புதுமண தம்பதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் குடும்பத்துடன் வழிபடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

தஞ்சை மாவட்டத்தில் காவிரி கரையோரங்களில் மக்கள் மங்கள பொருட்களை வைத்து வழிபடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களிலும் ஆடிப்பெருக்கு விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்படுவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆடிப்பெருக்கை ஒட்டி திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் இன்று நடைபெற்ற தீர்த்தவாரியில் ஏராளமானோர் பங்கேற்று சுவாமி தரிசனம் மேற்கொண்டனர்.

**நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் உள்ள** அரப்பளீஸ்வரர் சுவாமி திருக்கோவிலில் ஆடிப்பெருக்கை ஒட்டி சோமஸ்கந்தர் திருவீதி உலாவும், தீர்த்தவாரியும் இன்று நடைபெறுகிறது.

**திருத்தணி மற்றும் திருச்செந்தூர் அருள்மிகு** சுப்ரமணிய சுவாமி திருக்கோவில்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதணைகள் நடைபெற்றன.

**மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே பூம்புகார்** காவிரி சங்கமத்தில் இந்நாளையொட்டி புதுமணத் தம்பதிகள் மாலைகளை ஆற்றில் விட்டு புதிய மங்கலநாண் பிரித்து கோர்க்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

**தூத்துக்குடி மாவட்டத்தில் 114 ஏக்கர் பரப்பளவில்** ஆயிரத்து 119 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் நாளை திறந்துவைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் முதலமைச்சர் கலந்கொள்கிறார்.

தொழில் முதலீடுகள் தொடர்பாக பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகவுள்ளன.

❖❖❖❖❖❖

சிவசங்கர்

**தமிழக அரசு மகளிர் மாற்றுத்திறனாளிகள் பள்ளி** கல்லூரி மாணாக்கர் உள்ளிட்டோருக்கு சிறப்பான பேருந்து சேவைகளை அளித்து வருவதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் 3 புதிய புறநகர் பேருந்து சேவைகளை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், பொதுபோக்குவரத்து சேவைகளை மக்கள் அதிகளவில் பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖

தூத்துக்குடி வாய்ஸ்

**பிரதமர் திரு.நரேந்திரமோடி** கடந்த 26-ம் தேதி தூத்துக்குடி புதிய விமான நிலையத்தை திறந்துவைத்த நிலையில் அங்கிருந்து விமானப் போக்குவரத்து சேவை இன்று தொடங்கியது.

சென்னையிலிருந்து விமானம் மூலம் இன்றுகாலை தூத்துக்குடி வந்தடைந்த பயணிகளுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**திருவண்ணாமலை மாணவி வாய்ஸ்**

**மாணாக்கரிடையே செயல்முறை கற்றல், திறன்** வளர்த்தல், படைப்பாற்றல் உள்ளிட்டவற்றை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசின் பிரேரணா திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற திருவண்ணாமலையை சேர்ந்த மாணவி வரும் 15-ம் தேதி குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அஞ்சல் துறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இது தனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக மாணவி தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

இருவரி

**கிருஷ்ணகிரி** மாவட்டத்தில் குழந்தை பராமரிப்பு இல்லங்களுக்கு முன்மாதிரி சேவை மைய விருதுகள் வழங்கப்படவுள்ளதாகவும், தகுதியுடையோர் வரும் 15-ம் தேதிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

**பெரம்பலூர் அரசு இசைப்பள்ளியில் கலை** பண்பாட்டுத்துறை சார்பில் பகுதிநேர கிராமிய கலைப்பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆடசித்தலைவர் திரு.அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் கறவை பசுக்களுக்கு 50** சதவிகித மானியத்துடன் ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**சுதந்திர தின கொண்டாட்டங்களின் பாதுகாப்பு** நடவடிக்கையாக வரும் 16-ம் தேதிவரை புதுதில்லியில் ட்ரோன்கள், பாரா கிளைடர்கள், குவாட் கேப்டர்கள் உள்ளிட்டவற்றை இயக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

**அரியலூர் அரசு பெண்கள் உயர்நிலை பள்ளியில்** மரபு விதைகள் கண்காட்சி மற்றும் விற்பனை திருவிழா வரும் 10-ம் தேதி நடைபெறுகிறது.

இதில் மரபுவிதை நெல் மூலிகை செடிகளை விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்யவுள்ளனர்.

**தூத்துக்குடி திரேஷ்புரம் அண்ணா காலனி** பகுதியிலிருந்து படகுமூலம் இலங்கைக்கு கடந்தப்பட இருந்த 30 லட்சரூபாய் மதிப்பிலான ஐம்பொன் விஷ்ணுசிலையை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். கடத்தலில் ஈடுபட்ட 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

❖❖❖❖❖❖

**தாய்ப்பால்**

**விருதுநகர் மாவட்டம் சிவகாசியில்** உலக தாய்ப்பால் வாரத்தை ஒட்டி, தாய்ப்பாலின் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் இன்று நடைபெற்றது.

இதில் மருத்துவர்கள் செவிலியர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

❖❖❖❖❖❖

**வானிலை**

**கோவை, நீலகிரி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை,** கடலூர், தேனி, தென்காசி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை உள்ளிட்ட 16 மாவட்டங்களில் இன்று கனமழைபெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**டேபிள் டென்னிஸ்**

**பிரேசில் ∴போஸ் டு இகுவாசுவில் நடைபெறும்** உலக டேபிள் டென்னிஸ் போட்டியில் கலப்பு இரட்டையர் இறுதியாட்டத்தில் இந்தியாவின் மனுஷ் ஷா, தியா சிட்டாலே - ஜப்பானின் சத்தோஷி ஜடா, ஹேனோக்கா ஹாஷிமோட்டா இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர்** டென்னிஸ் ஆடவர் இரட்டையர் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சந்திரசேகர் இணை கைப்பற்றியுள்ளது.

இறுதியாட்டத்தில் ராம்குமார் இணை தைவான் இணையை 6 - 4, 6 - 4 என்ற நேர் செட்களில் வென்றது.

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**அமெரிக்கா சேலஞ்சர் கோப்பை டென்னிஸ்** போட்டியின் ஆடவர் ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தக்ஷினேஸ்வரர் சுரேஷ் - ஜப்பானின் மேட்சுடாவை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖